# கவிமணி இன்பத்தமிழ் - X

## மாதிரி வினாத்தாள் – 1

## தமிழ்

காล அளவு:3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள்:100

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளனவா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன் படுத்த வேண்டும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும். குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

### (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். $15 \times 1 = 15$

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. ‘உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்’– பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

3. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ – யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. <u>‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’</u> நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ______.

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

5. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாதவர் _____.

அ) ஒழுக்கமில்லாதவர் ஆ) இழுக்கமுடையவர்

இ) அறிவிலாதார் ஈ) நடத்தையிலார்

6. செய்தி – 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி – 2 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்தவர்கள் தமிழர்கள்

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1 சரி, செய்தி 2 தவறு

இ) செய்தி 2 மட்டும் சரி ஈ) செய்தி 1 சரி, செய்தி 2ம் சரி

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

7. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

8. "இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!" – இவ்வடியில் பத்தும் எட்டும் என்பன ______.

அ) சங்க இலக்கியங்கள் ஆ) காப்பிய இலக்கியங்கள்

இ) அற இலக்கியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்

9. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளுக்குப் பொருத்தமான தலைப்பு எது?

குறிப்பு :

1) கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

2) திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிக்கிறது.

அ) இணையம் ஆ) மடிக்கணினி

இ) கணினி ஈ) செயற்கை நுண்ணறிவு

10. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

**விடை : ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி**

11. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ______.

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்".

12. 'எந்தமிழ்நா' என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது :

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. வேறார் புகழுரையும் – இத்தொடரில் 'வேறார்' என்பது:

அ) தமிழர் ஆ) சான்றோர்

இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## பகுதி – II

**(மதிப்பெண்கள் : 18)**

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $4 \times 2 = 8$

**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. 'நச்சப் படாதவன்' செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட (அடிக்கோடிட்ட) சொல்லுக்குப் பொருள் தருக.
17. ஒழுக்கத்தினால் எய்துவது எது? இழுக்கத்தினால் அடைவது யாது?
18. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
19. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
20. செயற்கை நுண்ணறிவின் வரவால் ஏற்படும் வேலைவாய்ப்புகளைப் பற்றி எழுதுக.
21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $5 \times 2 = 10$

22. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.
காண், சிரி, படி, தடு.
23. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.
இலுப்பைப் பூக்கள், இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.
24. மரபுத் தொடர்களுக்கான பொருளறிந்து தொடரில் அமைக்க.
பசுமரத்தாணிபோல, அவசரக் குடுக்கை
25. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரேநிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)
26. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம் இதுவே சுருக்கமான வழி என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா அதற்குக் காரணமாக இருப்பது செயற்கை நுண்ணறிவே
27. கலைச்சொல் தருக.
Nanotechnology, Cosmic rays
28. 'பொறித்த' – இலக்கணக்குறிப்புத் தருக.

## பகுதி – III

**(மதிப்பெண்கள் : 14)**

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
30. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி, வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

இ) பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

## பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

**வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. ஈகைக்குணம் கொண்ட அரசர்கள் குறித்துப் புகார் நகரப் பெருமக்கள் கூறும் கருத்துகள் யாவை?

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக.

'மாற்றம் எனத் தொடங்கி 'சாலை' என முடியும் காலக்கணிதப் பாடல்

(அல்லது)

"வெய்யோன் ஒளி" எனத் தொடங்கி "உடையான்" என முடியும் கம்பராமாயணப் பாடல்.

## பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

35. "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

36. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** $5 \times 5 = 25$

38. அ) நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்,<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்,<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்,<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்?<br>**நவீன கவிதை.** | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்.<br>**நாட்டுப்புறப்பாடல்.** |

(அல்லது)

ஆ) சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு, தரமற்றதாகவும், விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) பரிசுபெற்ற நண்பருக்குப் பாராட்டுக் கடிதம்.

40. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.



வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை , யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

41. மதிப்புரை எழுதுக.

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக்கூறு – நூல் ஆசிரியர்.

42. மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

(அல்லது)

அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| வேர்ச்சொல் | எழுவாய்த்தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா! ஓடாதே! | அருணாவிற்காக ஓடினார் |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | கதையைச் சொன்னார் |
| தா | | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | |
| பார் | துளிர் பார்த்தாள் | | பார்த்துச் சிரித்தாள் | | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | | குழந்தையே! வா! | |



www.Padasalai.Net

## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 × 8 = 24**

43. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

44. அ) சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேசமட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம், தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

(அல்லது)

ஆ) ‘புயலிலே ஒரு தோணி’ கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும், புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

(அல்லது)

ஆ) ‘சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்’ என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 2

## தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். $15 \times 1 = 15$

1. 'சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில், பாக்கம் என்பது ______.

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

2. குலசேகர ஆழ்வார், 'வித்துவக் கோட்டம்மா' என்று, ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதிகள் முறையே

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

3. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5. 'இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்' – இவ்வடிகளில் கற்காலம் என்பது ______.

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

6. செய்தி – 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி – 2 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்தவர்கள் தமிழர்கள்

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1 சரி, செய்தி 2 தவறு

இ) செய்தி 2 மட்டும் சரி ஈ) செய்தி 1 சரி, செய்தி 2ம் சரி

7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ______.

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

8. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது – இத்தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

9. வெற்றிலை விற்போரும், எண்ணெய் விற்போரும், ______ எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அ) பரதவர், பாசவர் ஆ) காருகர், கஞ்சகாரர் இ) பாசவர், ஓசுநர் ஈ) காழியர், ஓசுநர்



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

10. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்பது, ______ வினா.
"அதோ, அங்கே நிற்கும்," என்று மற்றொருவர் கூறுவது ______ விடை.
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

11. நாளை வந்தான் என்பது ______.
அ) திணை வழு ஆ) பால் வழு இ) இடவழு ஈ) காலவழு

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"காற்றே வா"
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

12. மயலுறுத்து' என்பதன் பொருள் :
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய் இ) அடங்கச் செய் ஈ) சீராக

13. ப்ராண ரஸம் – பொருள் தருக.
அ) உயிர் வளி ஆ) கார்பன்–டை–ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக – டை – ஆக்ஸைடு

14. 'மிகுந்த' – இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம் இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

15. நீரலைகளின் – பிரித்தெழுதுக.
அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

## பிரிவு – II

**(மதிப்பெண்கள் : 18)**

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $4 \times 2 = 8$
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. மலர்களை மென்மையாகத் தொடுக்க வேண்டும். ஏன்?
17. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?
18. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
19. 'நச்சப் படாதவன்' செல்வம் – இத்தொடரில் வண்ண மிட்ட (அடிக்கோடிட்ட) சொல்லுக்குப் பொருள் தருக.
20. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $5 \times 2 = 10$

22. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
i) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
ii) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

23. புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.

கார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார்முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன்.
நான் யார்?

24. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம்

25. தேன், நூல், பை, மலர், வா – இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.
26. வசன கவிதை – குறிப்பு வரைக.
27. கலைச்சொல் தருக. : Consulate, Patent
28. 'மயங்கிய' இலக்கணக் குறிப்புத் தருக.

## பகுதி – III

## (மதிப்பெண்கள் : 14)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

29. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
30. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம்சுட்டிப் பொருள் விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

அ) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு ?
ஆ) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது ?
இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. சரயுநதி பரவிப் பாய்ந்ததைக் கம்பர் எவ்வாறெல்லாம் சித்திரிக்கிறார்?
33. இல்லறத்தில் விருந்தோம்பல் செய்யும் முறைகளைக் கூறுக.
34. அடிபிறழாமல் எழுதுக.

'விருந்தினனாக' எனத் தொடங்கி 'பண்பே' என முடியும் காசிக்காண்டப் பாடல்.

(அல்லது)

'அன்னை மொழியே' எனத் தொடங்கி 'பேரரசே' என முடியும் அன்னை மொழியே பாடல்

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

35. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

36. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.

பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே?
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு?
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்! நீங்கள் கவியரங்கத்துக்கு வருவீர்களோ? மாட்டீர்களோ?
பாமகள் : 'வராமல் இருப்பேனா?'

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. $5 \times 5 = 25$

38. அ) கம்பரின் கவித்திறனுக்குச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

39, அ) விருதுபெற்ற நல்லாசிரியருக்குப் பாராட்டுரை வழங்குக.

(அல்லது)

ஆ) சுற்றுலாச் செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

மகளிர் நாள் விழா

இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் – 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை –
ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

42. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

(அல்லது)

மொழிபெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** $3 \times 8 = 24$

43. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

ஆ) 'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

44. அ) எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை, அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

45. அ) 'மங்கையராகப் பிறப்பதற்கே...' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பெண் சாதனையாளர்களைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

(அல்லது)

ஆ) மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன் படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 3

## தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 × 1 = 15

1. “இன்னறும் பாப்பத்தே” எனப் பெருஞ்சித்திரனார் பாடுவது ______.
அ) பதிற்றுப்பத்து ஆ) பத்துப்பாட்டு இ) தமிழ்விடுதூது ஈ) பிள்ளைத்தமிழ்

2. “பாடுஇமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. கெடுப்பார் இலாது கெடும் மன்னன் _____.
அ) பெரியாரைப் பேணிக் கொள்ளாதவன் ஆ) மெய்ப்பொருள் காணாதவன்
இ) இடிப்பாரை இல்லாதவன் ஈ) கண்ணோட்டம் இல்லாதவன்

4. “அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை – என்று, இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

5. பின்வருவனவற்றுள் முறையான தொடர் –
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

6. ‘உப்பில்லாக் கூழ் இட்டாலும்
உண்பதே அமிர்தம் ஆகும்‘ இப்பாடல்வரி இடம்பெற்ற நூல் ______.
அ) காசிக்காண்டம் ஆ) வெற்றி வேற்கை இ) சீவகசிந்தாமணி ஈ) விவேக சிந்தாமணி

7. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்குவது _____.
அ) பெருமை தரும் முயற்சி ஆ) இன்மை புகுத்தும் முயற்றின்மை
இ) வேளாண்மை என்னும் செருக்கு ஈ) நச்சப்படாத செல்வம்

8. இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள்,
அ) வாட்சன் ஆ) பெப்பர் இ) வேர்டுஸ்மித் ஈ) இலா

9. கூற்று 1 : தேசிய உணர்வு ஊட்டுவதற்கும், ஒருமைப் பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.
கூற்று 2 : மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதில் பெறமுடியும்.
அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி
இ) கூற்று 1 ம், 2ம் சரி ஈ) கூற்று 1 ம், 2ம் தவறு



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

10 கண்ணுக்குக் காட்சியையும், சிந்தைக்குக் கருத்தினையும் தருவன ______.

அ) இசை ஆ) கல்வி இ) நிகழ்கலைகள் ஈ) நடிப்பு

11. மலர்கள் தரையில் நழுவும் – எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்றுஎரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே"

12. '**அசைஇ**' – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு,

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

13. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' – இவ்வடிகளில் '**பாக்கம்**' என்னும் சொல்லின் பொருள்,

அ) சிற்றூர் ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்

14. பாடல் பகுதி இடம்பெற்ற நூல்,

அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்,

அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி

இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே

## பிரிவு – II

## (மதிப்பெண்கள் : 18)

## பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $4 \times 2 = 8$

**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

17. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

18. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | உயிரினும் ஓம்பப் படும். |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று. |

19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20. தாய்மொழியும் ஆங்கிலமும் தவி, நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

21. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** $5 \times 2 = 10$

22. வினைஅடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.
காண், சிரி, படி, தடு.

23. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ) பொதுஅறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

24. தொடர்களில் உள்ள தடித்த சொற்களுக்குப் பதிலாக, அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.
அ) நளனும் அவனுடைய **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
ஆ) **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.

25. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.
அ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால், அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.
ஆ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

26. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
ஆ) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

27. கலைச்சொல் தருக. : Lute music, Chamber

28. 'ஒலித்து' – இலக்கணக் குறிப்புத் தருக.

## பகுதி – III

### (மதிப்பெண்கள் : 14)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** $2 \times 3 = 6$

29. பெருஞ்சித்திரனார் தமிழின் சிறப்பை, பெருமையை எவ்வாறு முழங்குவதாகக் கூறுகிறார்?

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு, அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?
ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு, செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல் படுகிறது?
இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

31. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து, அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.
இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## பிரிவு – 2

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. $2 \times 3 = 6$

வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
33. பெரியாரைத் துணையாகக்கொள்வதன் சிறப்பு யாது?
34. அடிபிறழாமல் எழுதுக.

‘சிறுதாம்பு’ எனத் தொடங்கி ‘கேட்டனம்’ என முடியும் முல்லைப்பாட்டு பாடல்.

(அல்லது)

‘வாளால்’ எனத் தொடங்கி ‘அடியேனே’ என முடியும் பெருமாள் திருமொழிப் பாடல்.

## பிரிவு – 3

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. $2 \times 3 = 6$

35. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து இறங்கினார் முகம்மது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

36. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்

நச்சு மரம்பழுத் தற்று. – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாள்தொறும் நாடு கெடும். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி – IV

### (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. $5 \times 5 = 25$

38. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை ‘நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்’ பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)


ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி, வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நூலகம் அமைக்க வேண்டி விண்ணப்பம்

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

41. மதிப்புரை எழுதுக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. $3 \times 8 = 24$

43. அ) போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) வானொலி அறிவிப்பு : ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால், ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போது வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும், எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்கவேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால், கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கொண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

44. அ) மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங் பற்றி, நீ அறிந்த செய்திகளைத் தொகுத்துத் தருக.

(அல்லது)

ஆ) “பிறர்நலம் பேணும் பேரருள் கொண்டவர் இராமானுசர்” – மெய்ப்பிக்க.

45. அ) 'மங்கையராகப் பிறப்பதற்கே...' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பெண் சாதனையாளர் களைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

(அல்லது)

ஆ) கதையாக்குக.

மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக.... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

ஐ ஐ ஐ ஐ ஐ

தேர்வு தொடங்கும் நாள் : 28.03.2025

தேர்வு முடியும் நாள் : 15.04.2025

| | | |
|---|---|---|
| **பள்ளிகள்** | – | **12,480** |
| மாணவர்கள் | – | 4,46,411 |
| மாணவிகள் | – | 4,40,465 |
| தனித்தேர்வர்கள் | – | 25,888 |
| சிறைவாசிகள் | – | 272 |
| **மொத்தம்** | – | **9,13,036** |
| தேர்வு மையங்கள் | – | 4,113 |
| பொதுத்தேர்வு முடிவு | – | மே, 19 |

**பொதுத்தேர்வு எழுத இருக்கின்ற மாணவ, மாணவியர் அனைவரும் உயர் மதிப்பெண்கள் பெற்று, வெற்றிவாகை சூட**

**கவிமணி இன்பத்தமிழ் வாழ்த்துகிறது.**

www.Padasalai.Net